### சட்டமன்றத்தில் முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து ஒருங்கிணைந்த

# கடலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் மஞ்சக்குப்பம் தலைமை தபால் நிலையம் எதிரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சட்டமன்றத்தில் முதலமைச்சரின் ஆணவ பேச்சைக் கண்டித்து ஒருங்கிணைந்த கடலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் நாளை (12.09.2026 - சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில், கடலூர், மஞ்சக்குப்பம் தலைமை தபால் நிலையம் எதிரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ தலைமையிலும், கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் சி.வெ.கணேசன் எம்.எல்.ஏ, ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறவுள்ளது.

அதுசமயம், இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஒருங்கிணைந்த கடலூர் மாவட்ட தி.மு.க. கடலூர் கிழக்கு மற்றும் கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், ஊராட்சி மற்றும் கிளை, வட்டம், வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாநகர மேயர், மண்டல குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், துணைத் தலைவர்கள், முன்னாள் மாவட்டக்குழு, ஒன்றியக்குழு ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநரக, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், வார்டு கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

### முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து நாளை

# புதுக்கோட்டையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ. - கே.கே.செல்லப்பாண்டியன் அறிவிப்பு!

புதுக்கோட்டை, செப். 11 –

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

திராவிட முன்னேற்றக் கழகத்தையும், ஐந்து முறை இந்த நாட்டை ஆண்ட முதலமைச்சர் தலைவர் கலைஞரையும் இந்தியாவின் புகழை தோகா மாநாட்டில் நிலைநாட்டிய பொருளாதார மேதை முரசொலி மாறனையும், திருமணம் ஆன ஐந்தே மாதத்தில், 23 வயதில் அவசரநிலைச் சட்டத்தில் கைதாக்கப்பட்டு சிறைச்சாலை சித்திரவதைகளை அனுபவித்து, ஓராண்டு காலம் சிறையில் இருந்த தியாகத்தைச் செய்த தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்





களின் தியாகத்தை கொச்சைப்படுத்தி தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதல்வர் விஜய் பேசிய பேச்சு கடுமையான கண்டனத்துக்குரியது. அரசியல் உலகில் இத்தகைய அருவெறுப்பான உரையை சட்டமன்றம் கண்டிருக்காது.

முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து நாளை (செப் 12 சனிக்கிழமை) காலை 10 மணியளவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் புதுக்கோட்டை திலகர் திடலில் நடைபெறுகிறது.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள். தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கழக முன்னோடி கள், கழக உடன் பிறப்புகள், அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள், இந்நாள் பிரதிநிதிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் இந்த மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கண்டனத்தை பதிவு செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளனர்.

### சட்டமன்றத்தில் முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து

# ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் இரா.இராஜேந்திரன் – எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. – டி.எம்.செல்வகணபதி அறிக்கை!

சேலம், செப். 11 -

ஒருங்கிணைந்த சேலம் மாவட்டச் செயலாளர்கள் இரா.இராஜேந்திரன் - எஸ்.ஆர்.சிவலிங்கம் - டி.எம்.செல்வகணபதி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

திராவிட முன்னேற்றக் கழகத்தையும், ஐந்து முறை முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரையும் இந்தியாவின் புகழை தோகா மாநாட்டில் நிலைநாட்டிய பொருளாதார மேதை முரசொலி மாறன் அவர்களையும், திருமணம் ஆன ஐந்தே மாதத்தில், 23 வயதில் MISA (Maintenance of Internal Security Act) அவசரநிலைச் சட்டத்தில் கைதாக்கப்பட்டு சிறைச்சாலை சித்திரவதைகளை அனுபவித்து, ஓராண்டு காலம் சிறையில் இருந்த தியாகத்தைச் செய்த தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தியாகத்தை கொச்சைப்படுத்தி தமிழ்நாடு சட்







டமன்றத்தில் முதலமைச்சர் விஜய் பேசிய பேச்சு கடுமையான கண்டனத்துக்குரியது.

ஆட்சியின் தோல்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் தப்பித்துக் கொள்ள, கொச்சையான பேச்சுகளைப் பேசும் தரமற்ற மனிதராக முதலமைச்சர் விஜய் மாறியிருக்கிறார். இவரது இப்பேச்சைக் கண்டிக்கும் வகையில், ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட தி.முக. சார்பில் சேலம் மாநகர கோட்டை மைதானத்தில் நாளை (12.09.2026 - சனிக்கிழமை) காலை 09.30 மணியளவில் சேலம் ஒருங்கிணைந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் தலைமையில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறும்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் சேலம் கிழக்கு மாவட்ட கழகத்திற்குட்பட்ட முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளில் உள்ள நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் இன்னாள், முன்னாள் பிரதிநிதிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டு முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து கண்டன முழக்கங்கள் எழுப்ப அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### சட்டமன்றத்தில் முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து

# திருப்பூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் அறிக்கை!

திருப்பூர், செப். 11 -

சட்டமன்றத்தில் முதலமைச்சரின் ஆணவ பேச்சைக் கண்டித்து திருப்பூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்நாளை (12.09.2026 - சனிக்கிழமை) காலை 09.00 மணியளவில் திருப்பூர் ரயில் நிலையம் முன்பு அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் சிலை அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் திருப்பூர் மத்திய மாவட்ட கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் க.செல்வராஜ் ஆகிய எனது தலைமையில் நடைபெற வுள்ளது.

அதுசமயம், இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் திருப்பூர் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்



வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், வார்டு மற்றும் ஊராட்சி கிளை கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மண்டல குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி,

பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், துணைத் தலைவர்கள், முன்னாள் மாவட்டக்குழு, ஒன்றியக்குழு ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநரக, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், வார்டு கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி,

மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் திருப்பூர் தெற்கு மாநகரக் கழகச் செயலாளர் டி.கே.டி. மு.நாகராசன் நன்றியுரை யாற்றுகிறார்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து நாளை

# திருப்பூரில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் ந.தினேஷ்குமார் அறிக்கை!

திருப்பூர், செப்.11-

முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து நாளை (செப் 12 ) திருப்பூர் ரயில் நிலையம் முன்பு அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா தந்தை பெரியார் சிலை முன்பு மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறதென்று திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர், முன்னாள் மேயர் ந.தினேஷ்குமார் அறிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சட்டமன்றத்தில் முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து திருப்பூர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நாளை (12.09.2026, சனிக்கிழமை), காலை 09.00 மணியளவில் திருப்பூர் ரயில் நிலைய முன்பு அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் சிலை முன்பு மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.



அதுசமயம் இக்கூட்டத்தில் திருப்பூர் வடக்கு மாவட்டற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள், அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள், இந்நாள் பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் இந்த மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு வெற்றி பெற செய்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### சட்டமன்றத்தில் முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து

# ஒருங்கிணைந்த கிருஷ்ணகிரி மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் தே. மதியழகன் – ஒய். பிரகாஷ் அறிக்கை!

கிருஷ்ணகிரி, செப். 11 -

திரையுலகக் கவர்ச்சியையும் சமூக ஊடகப் பிம்பத்தையும் அரசியல் மூலதனமாக்கி, மக்களுக்கு ஏராளமான வாக்குறுதிகளை அளித்து ஆட்சிக்கு வந்த முதலமைச்சர் விஜய் தலைமையிலான அரசு, இன்று மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியாமல் திணறி வருகிறது.

மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. திராவிட மாடல் ஆட்சியில் கழகத் தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களால் கொண்டுவரப்பட்ட மக்கள் நலத் திட்டங்களில் சிலவற்றை நிறுத்துவதும், நிறுத்த முடியாத திட்டங்களின் பெயர்களை மாற்றி அவற்றைத் தங்களது சாதனைகளாகக் காட்ட முயல்வதும் நடைபெற்று வருகிறது.

சட்டம் - ஒழுங்கு, போதைப்பொருள் தடுப்பு, பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு உள்ளிட்ட முக்கியப் பிரச்சினைகளில் அரசின் செயல்பாடு குறித்து மக்களிடையே எழும் கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டிய முதலமைச்சர், அவற்றி லிருந்து மக்களின் கவனத்தைத்திசைதிருப்பும் வகையில் தமிழ்நாடு சட்டமன்றத்தையே அரசியல் வசன மேடையாக மாற்ற முயல்வது கடும் கண்டனத்திற்குரியது.

சட்டமன்றம் சினிமா வசனம் பேசும் மேடை



அல்ல!

அது தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளையும் வாழ்வாதாரத்தையும் பேச வேண்டிய ஜனநாயகத்தின் உயரிய மன்றம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தையும், ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று தமிழகத்தின் வளர்ச்சிக்காக வாழ்நாள் முழுவதும் உழைத்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களையும், இந்தியாவின் பெருமையை உலக அரங்கில் நிலைநாட்டிய முரசொலி மாறன் அவர்களையும் விமர்சித்ததோடு, இளம் வயதில் மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைக் கொடுமைகளை எதிர்கொண்டு ஓராண்டு காலம் சிறைவாசம் அனுபவித்த கழகத் தலைவர் மாண்புமிகு தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் அரசியல் தியாகத்தைக் கொச்சைப்படுத்தும் வகையில் முதலமைச்சர் விஜய் சட்டமன்றத்தில் பேசியிருப்பது வன்மையான கண்டனத்



திற்குரியது.

சிறைச்சாலைக் கொடுமைகளைத் தாங்கியது தியாகம்!

மக்களுக்காகப் போராடியது வரலாறு!

அந்த வரலாற்றை ஏளனம் செய்வதை தி.மு.க. தொண்டர்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்!

சட்டமன்றத்தின் மாண்பு, மரபு மற்றும் வரலாற்றைப் பாதுகாக்க வேண்டிய முதலமைச்சரே, அதன் கண்ணியத்தைக் குறைக்கும் வகையில் பேசுவது தமிழக அரசியல் வரலாற்றில் விரும்பத்தகாத முன்னுதாரணமாகும்.

மக்கள் பிரச்சினைகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய சட்டமன்றத்தில், சமூக ஊடகங்களில் 'மீம்ஸ்', 'ரீல்ஸ்' உருவாக்குவதற்கான வசனங்களைப் பேசுவதும், அவை மக்களிடம் சென்றடைந்த பின்னர் அவைக்குறிப்பிலிருந்து நீக்குவதும் ஜனநாயக மரபுகளுக்கு உகந்ததல்ல.

மக்கள் கேட்பது வசனம் அல்ல - வளர்ச்சி!

மக்கள் எதிர்பார்ப்பது விளம்பரம் அல்ல - நல்லாட்சி!

சட்டமன்றத்திற்குத் தேவை ஆணவம் அல்ல - ஜனநாயக மாண்பு!

எனவே, திராவிட இயக்க வரலாற்றையும், கழகத் தலைவர்களின் தியாகத்தையும் கொச்சைப்படுத்தும் வகையில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதலமைச்சர் விஜய் பேசிய ஆணவப் பேச்சை வன்மையாகக் கண்டித்து, ஒருங்கிணைந்த கிருஷ்ணகிரி மாவட்ட தி.மு.க. சார்பில், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே. மதியழகன் Ex.MLA., அவர்கள் தலைமையிலும்,

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் ஒய். பிரகாஷ் Ex.MLA., முன்னிலையிலும், நாளை (12.09.2026 - சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில்,

கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் - பேரறிஞர் அண்ணா சிலை முன்பு "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெற உள்ளது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக மூத்த முன்னோடிகள், முன்னாள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, மாநகர, நகர, பகுதி, பேரூர், வட்ட மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள் - நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் பெருந்திரளாகக் கலந்து கொண்டு,

"வரலாற்றை கொச்சைப்படுத்தாதே!

சட்டமன்றத்தின் மாண்பைக் காப்பாற்று!

ஆணவப் பேச்சை நிறுத்து!"

என்ற கண்டனக் குரலை ஜனநாயக வழியில் வலிமையாகப் பதிவு செய்யும் வகையில், இம்மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் அனைவரும் பெருந்திரளாகக் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூறியுள்ளார்கள்.

# இடைத்தேர்தல்



மயக்கத்தில்
இழைத்த மாபாதகத்திற்கு
பிராயச்சித்தம் தேடிடவும்

ஆளத்தெரியாத மக்குகளின்
தலையில்
ஓங்கிக்
குட்டு வைத்து திருத்திடவும்

வலிய வந்து கிடைத்திருக்கும்
தாராள வாய்ப்பாக தாராபுரத்தையும்

மகத்தான சந்தர்ப்பமாக மதுராந்தகத்தையும்
மக்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

வாக்களிப்பீர்
உதயசூரியன்...

என்னநாஞ் சொல்றது



**மருது. அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக்குழு துணைத் தலைவர்